# பாலர்பாடசாலை
# பேர்ண் மாநில
# டொச் பேசும் பகுதியில்

## பெற்றோருக்கான
## தகவல்கள்

Elterninformation Kindergarten
Tamilisch

Erziehungsdirektion des Kantons Bern

# உள்ளடக்கம்

அன்பான பெற்றோரே ........ 3

பாலர்பாடசாலைக்கு நல்வரவாகுக ........ 4

கல்வியின் நோக்கம் மற்றும் பாடத்திட்ட வடிவங்கள் ........ 6

அபிவிருத்திக்கு உதவுவது ........ 8

பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றுசேர்ந்து செயற்படல் ........ 10

பாலர்பாடசாலை அமைப்புமுறை ........ 12

பராமரிப்பு மற்றும் உடல்நலம் ........ 14

பாடசாலை நிர்வாகம், திணைக்களங்கள் மற்றும் துறைசார் நிலையங்கள் .. 15

## Impressum

Herausgeberin und Copyright:
Erziehungsdirektion des Kantons Bern
Amt für Kindergarten, Volksschule und Beratung
www.erz.be.ch/akvb, akvb@erz.be.ch
Auflage Februar 2018

## அன்பான பெற்றோரே

உங்கள் பிள்ளைக்கு நான்கு வயதாகிவிட்டதால், ஆவணியில் பாலர்பாடசாலையில் சேர்ந்து கொள்ள வேண்டும். பாலர்பாடசாலையில் பிரவேசித்தல் என்பது உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் விசேடமான ஒரு நிகழ்வாகும்.

பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளையின் பாலர்பாடசாலை வரவு நன்றாக அமைவதற்கு பல பங்களிபப்புகளை வழங்க முடியும் என்பதுடன் உங்கள் பிள்ளைக்கு அவர்கள் கற்கும் விதங்களில் உதவிசெய்து ஊக்கமளிக்க முடியும். உங்கள் பிள்ளை பலவற்றையும் சுயமாக செய்வதற்கு நீங்கள் உற்சாகப்படுத்துங்கள். இதன் மூலம் உங்கள் பிள்ளையை சுயமாக இயங்கும் ஆற்றலையும் தாமாக செயற்படும் திறனையும் வளர்க்க முடியும். இது பாடசாலையில் அவர்கள் ஒரு பெரிய குழுவுடன் ஒன்றிணைந்து செயற்படுவதை இலகுவாக்கும்.

ஆகவே நீங்கள் பாலர்பாடசாலை குறித்து முழுமையான விபரங்களை அறிந்துகொள்வதற்காக நாங்கள் பல தகவல்களை ஒன்று சேர்த்து உங்களுக்கு வழங்குகின்றோம்.

உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் ஒரு சிறந்த ஆரம்பமாகவும், பாலர்பாடசாலை நாட்கள் குறைகள் இல்லாத, மற்றும் வியப்பான காலமாக அமையவும் நாங்கள் வாழ்த்துகின்றோம்!

கல்விப் பகுதி

### குறிப்பு

சில நகரங்களில் பாலர்பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் முதல் இரு பாடசாலை வகுப்புகளுடன் முழுவதுமாக அல்லது பகுதியாக ஒன்றுசேர்த்து (வயதில் கலந்தவர்களாக) கற்பிக்கப்படுவார்கள் (Basisstufe அல்லது Cycle élémentaire).

இதுகுறித்த மேலதிக தகவல்களை நீங்கள் கீழ்வரும் இணையத்தில் காணலாம்:
www.erz.be.ch/basisstufe
www.erz.be.ch/cycle-élémentaire-de

# பாலர்பாடசாலைக்கு நல்வரவாகுக

## பாலர்பாடசாலையில் சேர்ந்துகொள்வது
**Eintritt in den Kindergarten**

உங்கள் பிள்ளை பாலர்பாடசாலையில் சேர்ந்து கொள்வதன் மூலம் ஒரு புதிய வாழ்க்கை, விளையாட்டு, மற்றும் அனுபவம்; பெறும் சந்தர்ப்பம் அமைத்துக்கொடுக்கின்றது. உங்கள் பிள்ளை இங்கு பலவிதமான திறமைகள், பலவிதமான தேவைகள், பலவிதமான மொழிகள் மற்றும் பண்பாடுகளைக் கொண்ட பிள்ளைகள் குழுவைச் சந்தித்துக்கொள்வார்கள். இவ்விதமான பலதன்மைகள் இங்கு கற்கும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தப்படும்.

பிள்ளைகள் ஒருவரில் இருந்து ஒருவரும், ஒருவருடன் ஒருவருமாகக் கற்றுக்கொள்வார்கள். உங்கள் பிள்ளைக்கு பாலர்பாடசாலையில் புதியவற்றை செய்து பார்க்க, அதை ஆராய்ந்து பார்க்க, மற்றும் அதைச் செய்து முடிக்க சந்தர்ப்பம் கிடைக்கும். பலவிதமான அனுபவங்கள் ஊடாகவும் அனைத்து எண்ணங்கள் மூலமாகவும் தாம் நினைத்தவற்றை பொருட்களின் ஊடாக மற்றும் அதனுடன் சேர்ந்தவைகளின் ஊடாக மேலும் அபிவிருத்தி செய்துகொள்வார்கள்.

## பாலர்பாடசாலைக்கான ஆசிரியர்கள்
**Lehrperson für den Kindergarten**

பாலர்பாடசாலைக்காக நான்கு தொடக்கம் ஆறு வயதான பிள்ளைகள் உள்ள வகுப்பில் ஒரு ஆசிரியர் கற்பிப்பார். ஒவ்வொரு வகுப்பின் அளவைப் பொறுத்து அல்லது ஒன்றுசேர்ப்பைப் பொறுத்து இன்னுமொரு ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும் அல்லது வகுப்பு உதவியாளராக ஆசிரியர்க்கு துணைபுரியும் சந்தர்ப்பம் அமையலாம்.

ஆசிரியர் பிள்ளைகளை அவர்களின் வளர்ச்சி, திறமை, மற்றும் விருப்பங்களுக்கு, ஏற்ற விதத்தில் ஊக்கமளித்து உதவி செய்வார். அவர் ஊக்கம் கொடுப்பதுடன், பொருத்தமான பாட வடிவங்களைத் தேர்வுசெய்து, வகுப்புகளை நடத்துவதுடன், பாடத்திற்குத் தேவையான பொருட்களை ஆயத்தப்படுத்தி புதிய அனுபவங்களையும் அடுத்து கற்கவிருக்கும் படிநிலைகளையும் ஒழுங்கு செய்வார்.

உங்கள் பிள்ளைக்கு பாலர்பாடசாலையில் புதியவற்றை செய்து பார்க்க, அதை ஆராய்ந்து பார்க்க, மற்றும் அதைச் செய்து முடிக்க சந்தர்ப்பம் கிடைக்கும். பலவிதமான அனுபவங்கள் ஊடாகவும் அனைத்து எண்ணங்கள் மூலமாகவும் தாம் நினைத்தவற்றை பொருட்களின் ஊடாக மற்றும் அதனுடன் சேர்ந்தவைகளின் ஊடாக மேலும் அபிவிருத்தி செய்துகொள்வார்கள்.

# கல்வியின் நோக்கம் மற்றும் பாடத்திட்ட வடிவங்கள்

**Lehrplan 21**
பாலர்பாடசாலைப் பாடங்கள் (Lehrplan) க்கு ஏற்றவிதத்தில் அமைந்திருக்கும் வரை சரியான திசையைக் காட்டுவதாக இருப்பதுடன், இது அவருக்கு பாடங்களைத் திட்டமிட உதவுகின்றது.

Lehrplan 21 குறித்த மேலதிக விபரங்களை நீங்கள் கீழ்வரும் இணையத்தளத்தில் காணலாம்:
www.erz.be.ch/lehrplan21

விளையாடுதல் மற்றும் கற்றல்
**Spielen und Lernen**
விளையாடுதல் என்பது பாலர்பாடசாலையில் கற்கும் வடிவங்களில் மிக முக்கியமான ஒன்றாகும். விளையாட்டு பிள்ளைகளுக்கு, தாம் சொந்தமாகக்கற்கும் வழிமுறைகளைக் கண்டுகொள்ளவும் அவற்றைப் பின்பற்றவும் சந்தர்ப்பம் வழங்குகின்றது. விளையாடுதல் பிள்ளையின் பொறுமையை ஊக்குவித்து மேலும் ஆழமாக பயிற்சி பெறதூண்டும். அத்துடன் அது அளவான சவால்களையும் நடவடிக்கைகளை எடுக்கும் சந்தர்ப்பங்களையும் வழங்கும்.

பாலர்பாடசாலை வகுப்புகளில் போதியளவில் விளையாட்டு மற்றும் கற்கும் பொருட்கள் உள்ள சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவைகளிலிருந்து உங்கள் பிள்ளை ஒவ்வொரு நாளும் புதியவற்றை தேர்ந்தெடுக்கலாம். பிள்ளைகளுக்கு ஒரு விளையாட்டில் அல்லது கற்பதில் ஆர்வம் இல்லாமல் இருந்தாலும் அவற்றினை செய்வதற்கும் அவர்களுக்கு உற்சாகம் வழங்கப்படும்.

தமது விருப்பங்களுக்குத் தகுந்த விதத்திலும் நாளாந்த மற்றும் விளையாட்டு நிலைமைகளிலும் பாலர்பாடசாலைக் காலத்தில் கற்றுக்கொள்வது நல்ல திசையைக் காட்டுவதுடன் திட்டமிடும் வகையில் அமைந்து கொள்ளும். இதனூடாக பிள்ளைகள் அவர்களுக்கு வழங்கப்படும் கடமைகள் மற்றும் செயற்பாடுகளைக் கையாள்வதில் அதிகம் அக்கறை கொள்வார்கள்.

ஒருவரில் இருந்து மற்றவர் கற்பது
**Voneinander lernen**
குழுவில் உங்கள் பிள்ளை சேர்ந்தும் மற்றும் வேறு பிள்ளைகளிடமிருந்தும் கற்றுக்கொள்கின்றது. இதனூடாக பிள்ளைகள் ஒழுங்குவிதிகள் கடைப்பிடிக்கப்படுவதை அறிந்துகொள்கின்றனர். வித்தியாசமான நிலைமைகளின்போது அதற்குத் தகுந்தவாறு நடந்துகொள்வதை அவர்கள் கற்றுக்கொள்வதுடன், தமது விருப்பத்தை வேறு பிள்ளைகளுக்கு வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் தாங்களாகத் திரும்பிப் பெற, தாங்களாக கருத்துக்கூற, மற்றும் பிரச்சினையான நிலைமைகளில் அதற்குத் தீர்வைத்தேட, பழகிக்கொள்கின்றனர். இவை அவர்களுக்கு சமூகரீதியான நம்பிக்கையை ஊக்குவிக்கும்.

## தனிப்பட்ட அபிவிருத்தி
## Persönliche Entwicklung

பாலர்பாடசாலையில் பிள்ளைகள் தமது சொந்தத் தகுதியை வளர்த்துக் கொள்கின்றனர். அவர்களை சுயமாகச் செயற்பட வைப்பதுடன், தமது பொறுப்புகளை எடுத்துக் கொள்ளவும் தம்மால் சொந்தமாகச் செய்ய இயலும் என்பதையும் கற்றுக்கொள்கின்றனர். இதனூடாக அவர்கள் தங்களில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்கின்றனர். அவர்கள், ஒரு குறிக்கோளுக்குத் தகுந்த விதத்தில் தமது கவனத்தைக் கொள்வதற்கு மற்றும் தமது சொந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் தமது உணர்வுகளை அறிந்துகொள்ள மற்றும் நிலைமைகளுக்குத் தகுந்த விதத்தில் நடந்துகொள்ளக் கற்றுக்கொள்கின்றனர். பிள்ளைகள் தமது திறமைகளில் மற்றும் முடிவுகளில் நம்பிக்கையை வளர்ச்சியடைவதுடன் இவற்றை எப்பொழுதும் திறமையான விதத்தில் கணித்துக் கொள்வார்கள்.

## கலாச்சாரத் தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான அடிப்படை
## Grundlagen für den Erwerb der Kulturtechniken

பிள்ளைகள் தாமாக ஒன்றை வெளிப்படுத்த மற்றும் தாமாகத் தெரிவித்துக்கொள்ள, அனுபவங்களை விளக்க மற்றும் கதைகளைக் கேட்க கற்றுக்கொள்கின்றனர். இதனூடாக மொழியைப் பேசும் திறமை ஊக்குவிக்கப்படுவதுடன் வசன அமைப்பு விருத்தியடைகின்றது.

பிள்ளைகள் வாசிக்க மற்றும் எழுதக் கற்றுக்கொள்ள ஆயத்தப்படுத்தப்படுகின்றார்கள். இதன்போது எழுத்துக்கள் மற்றும் வசனங்களை பாடல்களில் மற்றும் கவிகளில் இருந்து அறிந்து கொள்கின்றனர். அத்துடன் மிக நுட்பமான இயங்கும் செயற்பாடுகள் மற்றும் இடம் மற்றும் வடிவங்களைத் தெரிந்துகொள்ளும் அறிவு மேலும் விருத்தியடையும். அளவுகள் மற்றும் எண்களுடன் விளையாடும்போது பிள்ளைகள் எண்கணிதம் மற்றும் அதனுடன் சேர்ந்தவைகள் குறித்து அறிந்து கொள்கின்றனர்.

பாலர்பாடசாலையில் பிள்ளைகள் தமது சொந்தத் தகுதியை வளர்த்துக் கொள்கின்றனர். அவர்களை சுயமாகச் செயற்பட வைப்பதுடன், தமது பொறுப்புகளை எடுத்துக் கொள்ளவும் தம்மால் சொந்தமாகச் செய்ய இயலும் என்பதையும் கற்றுக்கொள்கின்றனர்.

## அபிவிருத்திக்கு உதவுவது

### உதவுதல் மற்றும் ஊக்கமளித்தல்
**Unterstützen und fördern**

பிள்ளைகள் வித்தியாசமான முன்நிபந்தனைகள், அனுபவங்கள் மற்றும் திறமைகளை பாலர்பாடசாலைக்குக் கொண்டுவருவார்கள். ஆசிரியர்கள் அவதானித்தல் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடுவதன் ஊடாக பிள்ளைகளின் அபிவிருத்தி நிலை குறித்து அறிந்து கொள்வார்கள். இதனூடாக அவர்கள் பலம், திறமைகள், மற்றும் ஆர்வங்களைத் தெரிந்து கொள்வதுடன், பிள்ளைகள் சிரமப்படும் விடயங்கள் குறித்தும் அறிந்து கொள்வார்கள். ஆசிரியர் ஒரு பிள்ளையின் தனிப்பட்ட அபிவிருத்தியின் நிலையைத் தெரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு பிள்ளையுடன் சேர்ந்து புரியும் வேலைகளைத் திட்டமிடுவார்.

### மேலதிக உதவிகள்
**Zusätzliche Unterstützung**

தமது அபிவிருத்திக்கு மேலதிகமாக ஊக்கம் தேவைப்படும் பிள்ளைகள், குறிப்பிட்ட உதவிகளையும் மற்றும் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்வார்கள். உங்களுடன் கலந்துரையாடிய பின்பு மேலதிக துறைசார்ந்த நபர் ஒருவர் பிள்ளைகளுக்கு உதவி வழங்குவார், உ-ம்: மொழி ரீதியான அல்லது மூளை இயக்கம் சம்பந்தமான அபிவிருத்தி

### இரண்டாவது மொழியாக டொச்
**Deutsch als Zweitsprache (DaZ)**

டொச்சை தமது தாய்மொழியாகக் கொண்டிராத பிள்ளைகள், தமது முதல்மொழியின் தொடர்பால் பெற்ற சொந்த அனுபவங்களையும் மற்றும் மொழிச் சொற்களையும் எடுத்து வருவார்கள். பலமொழிகளுடன் வளரும் பிள்ளைகள் டொச் கற்பதற்கு பாலர்பாடசாலையில் விசேட முறையில் ஊக்கம் கொடுக்கும் வசதி உள்ளது.

உங்கள் பிள்ளை ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர்கள் கற்பிக்கும் மொழியையும் பிள்ளைகள் பேசுவதையும் விளங்கிக்கொண்டால், அவர்களிற்கு பாலர்பாடசாலை ஆரம்பம் மிக இலகுவாக அமையும். உங்கள் பிள்ளை எவ்வளவு முன்பாக டொச் மொழியுடன் தொடர்பு கொள்கின்றதோ, அவ்வளவிற்கு அதை அவர்கள் கற்பது இலகுவாக இருக்கும். ஆகவே உங்கள் பிள்ளை பாலர்பாடசாலையில் சேர்வதற்கு ஒரு வருடம் முன்பாகவே டொச் மொழியை கேட்க, மற்றும் கதைக்க, ஒழுங்காக சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்காக உதாரணமாக விளையாட்டுக் குழுக்கள், பிள்ளைகள் பராமரிக்கும் நிலையம் செல்வது அல்லது அயலில் உள்ள பிள்ளைகளுடன் பழகிக்கொள்ள வேண்டும்.

பல மொழிகளுடன் வளர்வது குறித்த எடுத்துக்காட்டுக்களை நீங்கள் கீழ் உள்ள இணையத்தளத்தில் காணலாம்:
www.erz.be.ch/hsk → Mehrsprachig aufwachsen

ஆசிரியர் ஒரு பிள்ளையின் தனிப்பட்ட அபிவிருத்தியின் நிலையைத் தெரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு பிள்ளையுடன் சேர்ந்து புரியும் வேலைகளைத் திட்டமிடுவார்.

# பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றுசேர்ந்து செயற்படல்

ஒன்றுசேர்ந்த செயற்பாடு
**Zusammenarbeit**

ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபருடன் சேர்ந்து செயற்படுவது உங்கள் பிள்ளைக்கு தகுந்த விதத்தில் ஊக்கமளிப்பதற்கு உதவும் என்பதுடன் இது பெற்றோருக்குக் கட்டாயமானதாகும்.

பாலர்பாடசாலைக்கு ஆயத்தமாகுதல்
**Fit für den Kindergarten**

பாலர்பாடசாலையின் ஆசிரியர்கள் பாலர்பாடசாலை வருடத்திற்கு முன்பாகவே பெற்றோருடன் தொடர்பு கொள்வார்கள்.

உங்கள் பிள்ளை பாலர்பாடசாலையை மற்றும் ஆசிரியர்களை அங்கு செல்லும் ஒரு நாளில் கண்டறிந்து கொண்டால், முதல் நம்பிக்கையைப் புதிதாகப் பெற்றுக்கொள்வதாக அமையும்.

«பாடசாலைக்கு ஆயத்தமாகுதல்» எனும் கைநூலில் அல்லது பின்வரும் இணையத்தளமான www.erz.be.ch/fit-fuer--den-kindergarten இல், நீங்கள் உங்கள் பிள்ளைக்கு அவர்கள் அபிவிருத்தியில் எவ்வாறு உதவிசெய்யலாம் மற்றும் எவை ஒரு சிறப்பான பாலர்பாடசாலை ஆரம்பத்திற்கு பங்களிக்கும் என்பது குறித்து நீங்கள் கண்டுகொள்ளலாம்.

பரஸ்பர தகவல் பரிமாற்றம்
**Gegenseitige Information**

ஒழுங்கான பரஸ்பர தகவல் பரிமாற்றமும், கலந்துரையாடலும் எதிர்பார்க்கப்படுவதுடன் அதுவே குறிக்கோளாகவும் உள்ளது. பிள்ளைகள் அதிக வேளைகளில் வீட்டுச் சூழ்நிலையில் இருந்து வேறுபட்ட சூழ்நிலையைப் பாலர்பாடசாலையில் கொண்டிருப்பர்.
பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளையை நன்கு விளங்கிக்கொள்வதற்கு தங்கள் அவதானங்களையும், அனுபவங்களையும் பரிமாறிக்கொள்வதால் மேலும் நல்ல முறையில் அதற்கு ஆதரவும், பாதுகாப்பும் அளிக்கமுடியும்.

பாலர்பாடசாலை இயங்கும் முறை குறித்து ஆசிரியர்கள் உங்களுக்கு உரிய காலத்துடன் மற்றும் ஒழுங்காக அறியத்தருவார்கள்.
பாலர்பாடசாலை உங்கள் பிள்ளையின் வளர்ப்பிலும் கல்வியிலும் உங்களுக்கு உதவிபுரிவார்கள். உங்களுக்கு தகவல்கள் தேவைப்படின் அல்லது பாலர்பாடசாலை குறித்து அல்லது உங்கள் பிள்ளையின் அபிவிருத்தி குறித்து கேள்விகள் இருந்தால், உங்கள் பிள்ளையின் வகுப்பு ஆசிரியரோடு தொடர்பு கொள்ளுங்கள்.

## பல்வேறு விதமான ஒன்றுசேர்ந்து ஆற்றும் செயற்பாடுகள்
## Verschiedene Formen der Zusammenarbeit

ஆசிரியர்கள் பெற்றோருடன் ஒன்று சேர்ந்து ஆற்றும் செயற்பாடுகளுக்கு பலவிதமான வடிவங்களைப் பயன்படுத்துவர் (உ-ம்: பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பு, பெற்றோருக்கு கடிதம், கலந்துரையாடும் வட்டம், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான நிகழ்ச்சிகள்).
பாலர்பாடசாலை நிகழ்வுகளில் மற்றும் பெற்றோர் கலந்துரையாடலின்போது பெற்றோரும் ஆசிரியர்களும் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து கொள்வதுடன், பரஸ்பரம் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள முடியும்.

## கலந்துரையாடல்
## Gespräche

ஆசிரியர்களானாலும், அத்துடன் பெற்றோர்களானாலும், தகவல்கள் மற்றும் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ள அல்லது கேள்விகளுக்கு விளக்கம் பெற கலந்துரையாடலை விரும்பினால், அது இடம்பெறும்.

## பெற்றோர் கலந்துரையாடல்
## Standortgespräch

பாடசாலை வருடத்திற்கு ஒருமுறை ஆசிரியர் பெற்றோருடன் ஒரு பெற்றோர் கலந்துரையாடலை நடத்துவார். இந்தப் பேச்சுவார்த்தையில் அவதானிப்புகள் பகிர்ந்துகொள்ளப்படுவதுடன் பிள்ளையின் அபிவிருத்தி, கற்கும் படிமுறை வளர்ச்சி, செய்முறையில் நடந்துகொள்வது, தனிப்பட்ட மற்றும் சமூகப் பொறுப்புகள் குறித்து கதைக்கப்படும்.

கதைக்கப்பட்ட விடயங்கள் ஆசிரியரால் கல்விப்பகுதி பெற்றோர் கலந்துரையாடலுக்காக வழங்கப்பட்ட பத்திரத்தில் பதிவு செய்யப்படும் (பட்டியலில் இருக்கும் விடயங்களுக்கு புள்ளடியிடுவது). ஒன்று சேர்ந்து கதைத்த பின்பு மேலதிக குறிப்புகள் தேவைப்படின் சில வார்த்தைகளில் குறிப்பிடலாம். இந்தப் படிவம் பதிவுக் கோவையின் ஒரு பகுதியாகும், பின்பு இது பாடசாலையின் மதிப்பீட்டு அறிக்கையில் வைத்துப் பாதுகாக்கப்படும்.

## வருகைதரல்
## Besuche

பெற்றோர் பாலர்பாடசாலையைப் பார்வையிடுதல் தொடர்பாக ஆசிரியர்களிடம் முன்னேற்பாடு செய்தல் வரவேற்கப்படுகின்றது.

ஒழுங்கான பரஸ்பர தகவல் பரிமாற்றமும், கலந்துரையாடலும் எதிர்பார்க்கப்படுவதுடன் அதுவே குறிக்கோளாகவும் உள்ளது.

## பாலர்பாடசாலை அமைப்புமுறை

### பாலர்பாடசாலை மக்கள் பாடசாலையின் ஒரு பகுதி
### Kindergarten als Teil der Volksschule

பாலர்பாடசாலை என்பது பதினொரு வருடங்கள் நடைபெறும் மக்கள் பாடசாலையின் தனித்துவமான ஒரு பகுதி என்பதுடன் இதற்குக் கட்டணம் இல்லை. வழமையாக இது இரு வருடங்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு பிள்ளையும், ஆடி மாதம் 31ம் திகதி நான்கு வயதை அடைந்திருந்தால், ஆவணியில் பாலர் பாடசாலையில் சேரமுடியும். இதைத் தீர்மானிப்பது வயதாக இருக்கும்.

உங்கள் பிள்ளையின் அபிவிருத்தி நிலையைக் கருத்திற்கொண்டு ஒருவருடத்தின் பின்பாகவும் பாலர்பாடசாலையில் சேர்த்துக்கொள்ள பெற்றோருக்கு சந்தர்ப்பமுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தை பாவித்துக்கொள்ள விரும்பினால், நகரசபை உங்களுக்கு அனுப்பி வைக்கும் விண்ணப்பப்படிவத்தில் இதைக் குறிப்பிடுங்கள். நீங்கள் முடிவெடுப்பதற்காக ஒரு ஆலோசனையை விரும்பினால் பாடசாலை நிர்வாகம் அதற்குத் தயாராக உள்ளது அத்துடன் வளர்ப்பு ஆலோசனை நிலையம் உங்கள் பிள்ளையின் வைத்தியர் அல்லது தாய் மற்றும் தந்தை ஆலோசனை நிலையத்திடமும் நீங்கள் ஆலோசனை பெறலாம்.

### பாலர்பாடசாலை நேரம்
### Kindergartenzeit

ஒரு கிழமைக்கு இடம்பெறும் பாடங்களின் எண்ணிக்கை (ஒரு பாடம் 45 நிமிடங்கள்) நீங்கள் வசிக்கும் நகரத்தில் ஒரு வருடத்திற்கு இடம்பெறும் பாடசாலை வாரங்களின் எண்ணிக்கையில் தங்கியிருக்கும். அதாவது 38 பாடசாலை வாரத்தைக் கொண்ட இடத்தில் இது 23 இல் இருந்து 26 பாடங்களாகவும் 39 பாடசாலை வாரத்தைக் கொண்ட இடத்தில் இது 22 இல் இருந்து 25 பாடங்களாகவும் இருக்கும்.

### முதல் பாலர்பாடசாலை வருடத்தில் பாடநேரங்கள் குறைப்பு
### Reduktion der Unterrichtszeit im ersten Kindergartenjahr

முதல் பாலர்பாடசாலை வருடக் காலத்தில் உங்கள் பிள்ளை பாலர்பாடசாலைக்கு குறைவான பாடநேரத்திற்கு வருகை தரலாம். இதை நீங்கள் விரும்பினால், உங்கள் பிள்ளையை பாடசாலை அதிபரிடம் பதியும்போது தெரிவிக்கவும். பாடநேரங்கள் ஆகக் கூடியது மூன்றில் ஒரு வீதத்தால் குறைக்கப்படலாம். இதன் நோக்கம் உங்கள் பிள்ளை முழுநேர வகுப்புகளுக்கும் விரும்பி வருவதற்கு தயாராகுவார்கள்.
பாடசாலை நிர்வாகமே இதன் ஒழுங்குமுறை மற்றும் பாடநேரக் குறைப்பு மாற்றங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து முடிவெடுக்கும்.

### பாடங்களுக்கு வருகைதருவது
### Besuch des Unterrichts

பிள்ளைகள் திங்கள்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை நேர அட்டவணையின்படி ஒழுங்காக பாலர்பாடசாலைக்கு வருகைதருவார்கள். காலையில் ஆரம்பம் மற்றும் முடிவுறும் நேரங்கள் பாடசாலை போன்றே இருக்கும் (திட்டமிடப்பட்ட நேரங்கள்). கிழமையில் ஒன்று தொடக்கம் இரண்டு தடவைகள்

பிற்பகலிலும் பாடங்கள் நடைபெறும். உங்கள் பிள்ளை நன்றாக ஓய்வெடுத்தபின் பாடங்களுக்கு வருமாறு நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். பாடங்களுக்கு மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு உதாரணமாக ஒன்றாகச் செல்லும் ஓய்வுப் பயணங்களின் பொழுதும் நீங்கள் அதற்கேற்ற தயார்படுத்தலுடன் உடைகளையும் அணிந்து வருவதை கவனித்துக் கொள்ளுங்கள்.

### பாலர்பாடசாலை வழி
### Kindergartenweg

பாலர்பாடசாலை தவிர்ந்த நேரங்கள் பிள்ளைகள் பாலர்பாடசாலைக்கு வருகை தரும் வழிப்பயணம், மற்றும் வீடு திரும்பிச் செல்லும் வழிப்பயணம், போன்றவைக்கு பெற்றோர்களே பொறுப்பு வகிப்பர். பாலர்பாடசாலைக்கு வரும் வழியை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து பழக்கிக் கொள்ளுங்கள், இதன்மூலம் சில காலத்தின் பின் பிள்ளை தனியாக வருவதற்குப் பழகிக் கொள்ளும்.

### வராதிருத்தல்
### Absenzen

வராத வேளையில் நீங்கள் ஆசிரியர்களுக்கு அது குறித்து நேரகாலத்துடன் அறிவியுங்கள் (உ-ம்: சுகவீனம் காரணமாக அல்லது உங்கள் பிள்ளைக்கு அல்லது குடும்பத்தில் விபத்து, வீடு மாற்றம், வைத்தியர் அல்லது பல்வைத்தியரிடம் செல்லுதல்) நேரகாலத்துடன், ஆகக் குறைந்தது பாடம் ஆரம்பிப்பதற்கு முன்பாக அறிவியுங்கள். காய்ச்சல், வாந்தி போன்ற நோய்கள் இருந்தால் உங்கள் பிள்ளை மீளக் குணமடையும்வரை வீட்டில் இருக்க வேண்டும்.

### விடுமுறை எடுப்பது
### Dispensationen

விடுமுறை எடுப்பதற்கான அனுமதி பெறுவதற்கு 4 கிழமைக்கு முன்பாக காரணத்தைக் குறிப்பிட்டு எழுத்து மூலமான விண்ணப்பத்தை பாடசாலை நிர்வாகத்திற்கு சமர்ப்பியுங்கள். இவ்விடுமுறை, உ-ம்: சமய சம்பந்தமான திருவிழா நாட்கள், முக்கிய குடும்ப நிகழ்வு, தாய்மொழி வகுப்பிற்கு செல்லுதல், கலாச்சார நிகழ்வுகள் (HSK) போன்ற காரணங்களிற்காகும்.

### அரைநாள் விடுமுறை
### Freie Halbtage

உங்கள் பிள்ளைக்கு ஒரு பாடசாலை வருடத்தில் ஐந்து அரைநாட்கள் வரை விடுமுறை எடுப்பதற்கு உரிமை உள்ளது. இந்த அரை நாட்களில் உங்கள் பிள்ளை அதற்கான காரணத்தைக் காட்டாமல் பாடத்திற்கு வராமல் இருக்கலாம். உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஒரு அரைநாள் விடுமுறை எடுக்க விரும்பினால், முன்கூட்டியே வகுப்பாசிரியரிடம் இது குறித்து அறிவித்துக் கொள்ளுங்கள். இந்த ஐந்தரைநாட்களை ஒவ்வொன்றாக அல்லது ஒன்று சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

### ஆரம்பப் பாடசாலையின் 1வது பாடசாலை வருடத்திற்குள் நுழைதல்
### Übertritt in das 1. Schuljahr der Primarstufe

வழமையாக அனைத்துப் பிள்ளைகளும் 2வருட பாலர்பாடசாலையின் பின்பு ஆரம்பப் பாடசாலையின் 1வது பாடசாலை வருடத்தில் நுழைவர். சில சந்தர்ப்பங்களில், (குறிப்பாக வளர்ச்சி நிலை காரணமாக) பிள்ளை ஒரு வருடம் முன்பாகவோ அல்லது பின்பாகவோ ஆரம்பப் பாடசாலையின் முதலாம் பாடசாலை ஆண்டிற்கு செல்ல நேரிடலாம். இப்படியான சந்தர்ப்பத்தில் பாடசாலை நிர்வாகம் ஆசிரியரின் விண்ணப்பத்திற்கிணங்க பெற்றோருடன் கலந்துரையாடி இதுகுறித்து முடிவெடுக்கும்.

பாலர்பாடசாலை ஆசிரியர்கள் முதலாவது பாடசாலை வருட ஆசிரியர்களுடன் ஒன்றுசேர்ந்து செயற்படுவார்கள். ஒன்றுசேர்ந்த செயற்திட்டங்கள் அல்லது சென்று பார்வையிடும் நாட்கள், பிள்ளைகளை ஆரம்பப் பாடசாலைக்கு செல்வதற்கு ஆயத்தப்படுத்த வழிவகுக்கின்றது.

## பராமரிப்பு மற்றும் உடல்நலம்

### முழுநாள் பாடசாலை
### Tagesschule

பாலர்பாடசாலையில் மற்றும் பாடசாலைகளில் கற்பதற்குப் பதிலாக பல நகரங்களில் ஒரு பராமரிப்பு வசதி உள்ளது: முழுநாள் பாடசாலை. இந்த முழுநாள் பாடசாலையில் அதிகாலையில் தொடங்கி மதிய வேளையிலும் தொடர்ந்து (மதிய உணவுடன்) மாலையில் முடிவடையும். இந்த முழுநாள் பாடசாலை செல்வது சொந்த விருப்பத்தைப் பொறுத்தது. பெற்றோர் தமது வருமானத்தைப் பொறுத்து இதற்கு கட்டணத்தை செலுத்துவதுடன் பராமரிப்பிற்கான கட்டணத்தையும் செலுத்துவர்.

பாடசாலை நிர்வாகத்திடம், உங்கள் நகரில் எவ்வித வசதி வழங்கப்படுகின்றது என்பது குறித்து நீங்கள் அறிந்து கொள்ளலாம். முழுநாள் பாடசாலைகள் குறித்த பொதுவான விபரங்களை இதன் கீழ் காணலாம்:
www.erz.be.ch/tagesschulen

குடும்பத்துக்கு வெளியால் பிள்ளைகள் பராமரிப்பு பற்றிய மேலதிக சந்தர்ப்பங்கள் (பிள்ளைகள் காப்பகம், நாள் பெற்றோர் (Tagesmutter) போன்றவை) குறித்து இதன் கீழ் காணலாம்:
www.gef.be.ch → Familie

### வைத்திய பரிசோதனை
### Ärztliche Untersuchung

பாலர்பாடசாலையின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரு வைத்திய பரிசோதனை மற்றும் வருடாந்த பல் பரிசோதனை ஒரு ஆண் அல்லது பெண் பல்வைத்தியரால் கட்டாயமாக எவ்வித கட்டணமும் பெறாமல் மேற்கொள்ளப்படும். சிகிச்சைகள் தேவைப்படின் ஆண் வைத்தியர் அல்லது பெண் வைத்தியரினால் உங்களுக்கு அறிவிக்கப்படும். இதற்கான செலவை பெற்றோரே சொந்தமாகப் பொறுப்பேற்க வேண்டும்.

## பாடசாலை நிர்வாகம், திணைக்களங்கள் மற்றும் துறைசார் நிலையங்கள்

பாடசாலை நிர்வாகம்
### Schulleitung
பாடசாலை நிர்வாகம் பாடசாலையின் மற்றும் பாலர்பாடசாலையின் கற்கைநெறிகளுக்கும் அதன் இயங்குதலுக்கும் பொறுப்பு வகிக்கும். பாடசாலை ஒழுங்குமுறை குறித்த கேள்விகள் அல்லது ஆசிரியருடன் ஒரு விடயத்தை உங்களால் தீர்த்துக்கொள்ள முடியாவிட்டால், பாடசாலை நிர்வாகத்தை நாடலாம்.

நகரத் திணைக்களம்
### Gemeindebehörde
பொறுப்புவகிக்கும் நகரத் திணைக்களம், பாலர்பாடசாலைப் பிள்ளைகள் மாநில சட்ட ஒழுங்குகளுக்கும் நகரத்தின் விதிகளுக்கும் அமைவாக வருகை தருகின்றார்களா என்பதைக் கவனித்துக் கொள்ளும்.

பாடசாலைப் பரிசோதகர்
### Schulinspektorat
பிரதேச பாடசாலைப் பரிசோதகர் மக்கள் பாடசாலையை மாநிலத்தின் சார்பில் மேற்பார்வை செய்துகொள்வார்.

கல்வி வளர்ச்சிக்கான ஆலோசனை நிலையம்
### Erziehungsberatungsstellen (EB)
உங்கள் மாநிலத்தின் பிரதேச கல்விவளர்ச்சி ஆலோசனை நிலையம் உங்கள் பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் விசேட விடயங்களில் மற்றும் வளர்ப்புமுறை குறித்த கேள்விகளின்போது ஆலோசனை வழங்கும்:
www.erz.be.ch/erziehungsberatung

மக்கள் பாடசாலை குறித்த மேலதிக தகவல்களை இதன்கீழ் காணலாம்:
www.erz.be.ch/elterninfo

004689